## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.வ.எண். | : | 56/2024 | வா.சா. | : | 1 |
| பெயர் | : | காஜா முகைதீன் | த/பெ. | : | முகமது இஸ்மாயில் |
| தாலுகா | : | நத்தம் | கிராமம் | : | நடுவனூர் |
| தேதி | : | 23.06.2025 | வயது | : | 52/2024 |

1969-ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44-ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

**வாதி தரப்பில் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். நான் இவ்வழக்கின் பிரதிவாதிக்கு எதிராக விளம்புகை பரிகாரம், செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனக்கு இவ்வழக்கு பற்றிய விபரங்கள் நன்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை நான் படித்து பார்த்து கையெழுத்து செய்தேன். அதில் உள்ள விபரங்கள் எனக்கு நன்கு தெரியும். எனது வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை வாதி தரப்பு சாட்சியமாக ஏற்றுக் கொண்டு எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

வா.சா.ஆ.1 – 14.11.2014 ம் தேதியிட்ட வாதிக்கு, அவரது தாயார் கொலுசன் பீவி எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் அசல்,

வா.சா.ஆ.2 – 17.01.2013 ம் தேதியிட்ட வாதியின் தாயார் பெயரிலுள்ள அடங்கல் சான்றிட்ட நகல் (வா.சா.ஆ.1 ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.)

வா.சா.ஆ.3– 15.11.2024 ம் தேதியிட்ட வில்லங்க சான்று கணிணி நகல்,

வா.சா.ஆ.4– 17.09.2021 ம் தேதியிட்ட வாதியின் பெயருக்கு பட்டா வழங்க வட்டாட்சியர் வழங்கிய உத்தரவு அசல்,

வா.சா.ஆ.5– 06.12.2024 ம் தேதியிட்ட வாதி பெயரிலுள்ள பட்டா கணிணி நகல்,

வா.சா.ஆ.6– 2018-2019 ம் வருடத்திற்கான வாதியின் பெயரிலுள்ள வீட்டுவரி ரசீது அசல்,

வா.சா.ஆ.7– 2019-2020, 2021-2022 ம் வருடத்திற்கான வாதியின் பெயரிலுள்ள வீட்டுவரி ரசீது அசல்,

வா.சா.ஆ.8– 2022-2023 ம் வருடத்திற்கான வாதியின் பெயரிலுள்ள வீட்டுவரி ரசீது அசல்,

வா.சா.ஆ.9– 03.10.2024 ம் தேதியிட்ட வாதி பெயரிலுள்ள ஆன்லைன் வீட்டுவரி ரசீது கணிணி நகல்,

வா.சா.ஆ.10 – 15.11.2024 ம் தேதியிட்ட 2024 ம் ஆண்டிற்கான அடங்கல் சானறிட்ட நகல்,

வா.சா.ஆ.11 – 03.12.2024 ம் தேதியிட்ட வாதி, பிரதிவாதி மீது நத்தம் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு கையிருப்பு நகல்,

வா.சா.ஆ.12– 04.12.2024 ம் தேதியிட்ட வாதியின் புகாரை நத்தம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் பெற்றுக்கொண்டதற்கான Track Consignment ரசீதுடன் கூடியது,

வா.சா.ஆ.13– 06.12.2024 ம் தேதியிட்ட பிரதிவாதி பெயரில் அரசால் வழங்கப்பட்ட இலவச வீட்டுமனைப் பட்டா கணிணி நகல்,

வா.சா.ஆ.14– 27.07.2024 ம் தேதியிட்ட தாவா சொத்திற்கான அரசு வழிகாட்டி மதிப்பு கணிணி நகல்,

மேற்கண்ட ஆவணங்கள் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.14 வரை குறியீடு செய்யப்படுகிறது.)

**குறுக்கு விசாரணைக்காக வழக்கு வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 23.06.2025 கையெழுத்து செய்துள்ளார்.

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.**

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 56/2024 | வா.சா. | : 1 |
| பெயர் | : காஜா முகைதீன் | த/பெ. | : முகமது இஸ்மாயில் |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : நடுவனூர் |
| தேதி | : 25.07.2025 | வயது | : 52/2025 |

1969-ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44-ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. நான் என்னுடைய வழக்கில் நான் மதுரையில் குடியிருந்து வருவதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். 2020 முதல் மதுரையில் உள்ள என்னுடைய மகள் வீட்டில் வசித்து வருகிறேன். வழக்கு சொத்தின் தெற்கு புறத்தில் எனது தாயார் கொலுசன் பீவீக்கு மற்றொரு சொத்து உள்ளது என்றால் இல்லை. அந்த சொத்தில் இருந்த வீட்டில் தான் நானும், எனது தாயரும், எனது 2 சகோதரர் மற்றும் சகோதரி வசித்து வந்தோம் என்றால் இல்லை. எனது தாயாருக்கு வழக்கு சொத்திற்கு தென்புறத்தில் வீடு இருந்தது என்றாலும், அதில் தான் குடியிருந்தோம் என்றாலும் அதை மறைத்து இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சர்வே

எண்.236/1 ஆனது தான பத்திரத்தின் படி எனக்கு பாத்தியம் என்று சொல்கிறேன் என்றால் சரிதான்.

3. நான் மதுரைக்கு செல்வதற்கு முன்னர் நானும் எனது தாயார் மற்றும் உடன் பிறந்த சகோதர சகோதரிகள் எந்த வீட்டில் வசித்தோம் என்றால் நானும், எனது தாயார் மற்றும் மனைவி ஆகியோருடன் சர்வே எண் 236/1 கண்ட வீட்டில் குடியிருந்தோம். 10 வருட காலமாக மேற்படி சர்வே எண்ணில் உள்ள வீட்டில் வசித்தோம். அந்த விபரத்தை நான் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். என்னுடைய சகோதர, சகோதரிகள் நடுவனூரில் எந்த சர்வே எண்ணில் வசித்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. கடந்த நான்கு வருடத்திற்கும் முன்பு வரை என்னுடைய சகோதர, சகோதரிகள் நான் மற்றும் எனது தாயாருடன் வழக்கு சொத்திற்கு தென்புறம் உள்ள கொலுசன் பீவீ பெயரில் உள்ள வீட்டில்தான் வசித்து வந்தோம் என்றால் சரியல்ல.

4. நானும், எனது தாயார் மற்றும் சகோதர சகோதரிகள் வசித்து வந்த வீடு ஆனது சேதாரம் ஆகிவிட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்து விபரத்தில் கண்ட சொத்தில் கூரை வீடு கட்டி குடியிருந்து வந்ததாக பிராது மற்றும் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கூரை வீட்டை இடித்து விட்டு தான் தான செட்டில்மெண்ட் எழுதி கொடுத்ததாக தெரிவித்துள்ள நிலையில் அந்த பழைய வீடு இருந்ததற்கு ஆதாரமாக வீட்டு வரி ரசீது அல்லது மின்கட்டண ரசீது ஆகியவற்றை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பழைய வீட்டில் குடியிருந்ததற்கு ஆதாரமாக வாக்காளர் அடையாள அட்டை போன்றவற்றை தாக்கல் செய்யவில்லை என்றால் உள்ளது, ஆனால் தாக்கல் செய்யவில்லை.

5. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் வழக்கு சொத்தில் இருந்த கூரை வீட்டை இடித்துவிட்டு தான செட்டில்மெண்ட் எழுதி கொடுத்ததாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் அது போன்ற வாசகங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். தான செட்டில்மெண்ட் ஏற்பட்டதற்கு பின்னர் வழக்கு சொத்தில் கூரை வீடு கட்டியதாக பிரமாண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். எந்த தேதியில் கூரைவீடு அமைத்தேன் என்பதை பிராது மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். நான் கட்டிய கூரை வீட்டிற்கு கதவு எண் மற்றும் குடும்ப அட்டை, அடையாள அட்டை போன்ற ஆவணங்கள் எதுவும் இருந்ததாக இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி கூரை வீட்டை அகற்றிவிட்டு ஆஸ்பெஸ்டாஸ் சீட் போட்டதாக பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எந்த வருடத்தில் ஆஸ்பெஸ்டாஸ் சீட் போட்டு வீடு அமைத்தேன் என்பதை வழக்கிலும் வாக்குமூலத்திலும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

6. வா.சா.ஆ.4 எனது பெயரில் உள்ள பட்டாவில் 20.09.2024 ம் தேதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணமானது 14.11.2014 ம் தேதி எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். தான செட்டில்மெண்ட் ஏற்படுத்தப்பட்ட காலத்தில் இருந்து எனக்கு பட்டா வழங்கப்பட்ட காலத்திற்கு இடைப்பட்ட காலத்தில் எனது பெயரில் பட்டாவோ, அடங்கலோ இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.10 அடங்கல் ஆனது கிராம நிர்வாக அதிகாரியால் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் சட்டப்படி செல்லத்தக்க ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி ஒரு வருட காலம் வழக்கு சொத்தில் குடியிருந்து வர

அனுமதி கேட்டார் என்று தெரிவிக்கும் நிலையில் எந்த தேதியில் எந்த மாதத்தில் எந்த வருடத்தில் கேட்டார் என்று குறிப்பிட்டு பிராதில் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி விபரத்தை நான் வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல.

7. எந்த மாதம் தேதி வருடத்தில் வழக்கு சொத்தின் சுவாதீனத்தை பிரதிவாதி வசம் ஒப்படைத்தேன் என்று பிராது மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்ட சொல்லவில்லை என்றால் சரியல்ல. 30.01.2020 ம் தேதி சுவாதீனம் ஒப்படைத்ததாக தெரிவித்துள்ளேன். எந்த தேதியில் பிரதிவாதி வழக்கு சொத்தில் குடியிருந்து வர அனுமதி கேட்டார் என்ற விபரத்தை தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.11 காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனுவில் 29.12.2024 ம் தேதி பிரதிவாதி என்னை மிரட்டியதாக குறிப்பிட்டுள்ளேன். மேற்படி புகார் மனுவை முன்கூட்டியே 03.12.2024 ஆம் தேதி கொடுத்துள்ளேன் என்றாலும், அதனால் தான் வழக்கில் தகுந்த முகாந்திரம் இல்லை என்பதால் மேல் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

8. பிராது வழக்கு சொத்து விபரத்தில் வீடு உள்ளதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 745 1/2 சதுர அடி கொண்ட மனை இடம் என்று மட்டும் தான் காட்டியுள்ளேன் என்றால் சரிதான். நான் என்னுடைய பிராது மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் ஆஸ்பெஸ்டாஸ் உள்ள வீடு உள்ளதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். சொத்து விபரத்தில் வீடு உள்ளதாக காட்டப்படாத நிலையில் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அதில் உள்ள வீட்டிற்குரிய ஆவணங்கள் கிடையாது என்றும் சரியல்ல. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை நான் படித்து பார்த்தேன். வழக்கு சொத்தில் வீடு இல்லை என்று பிரதிவாதி எதிர்வாதம் செய்துள்ளார் என்றால்

சரிதான் அதை எதிர்த்து நான் பதில் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு கிழக்கு பக்கம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இடம் உள்ளது என்றால் சரியல்ல, பிரதிவாதியின் மகள் மைதீன் பீவி என்பவர்தான் வசித்து வருகிறார், அந்த விபரத்தை பிராது மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

9. வழக்கு சொத்தின் கிழக்கு புறம் உள்ள இடத்தில் பிரதிவாதி வீடு கட்டி அவரது மகளுடன் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல. மைதீன் பீவி பேரில்தான் மின் இணைப்பு பெற்று மின் கட்டணம் செலுத்தப்பட்டு வருகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்தில் வீடு இல்லாத நிலையில், பிரதிவாதி குடியிருந்து வரும் வீட்டை அபகரிக்கும் எண்ணத்தில் பிரதிவாதி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கானது பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 25.07.2025 கையெழுத்து செய்துள்ளார்.

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.

## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.வ.எண். | : | 56/2024 | வா.சா. | : | 2 |
| பெயர் | : | ரகமத்துல்லா | த/பெ. | : | முகமது இஸ்மாயில் |
| தாலுகா | : | நத்தம் | கிராமம் | : | நடுவனூர் |
| தேதி | : | 22.08.2025 | வயது | : | 47/2025 |

1969-ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44-ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

**வாதி தரப்பில் முதல் விசாரணை**

1. நான் வாதி தரப்பு 2 வது சாட்சி ஆவேன். எனக்கு இவ்வழக்கு பற்றிய விபரங்கள் நன்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை நான் படித்து பார்த்து கையெழுத்து செய்தேன். அதில் உள்ள விபரங்கள் எனக்கு நன்கு தெரியும். எனது வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை வாதி தரப்பு சாட்சியமாக ஏற்றுக் கொண்டும், எனது அடையாள அட்டையையும் ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.

ஆதார் அடையாள அட்டை சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 22.08.2025 கையெழுத்து செய்துள்ளார்.

# மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 56/2024 | வா.சா. | : 2 |
| பெயர் | : ரகமத்துல்லா | த/பெ. | : முகமது இஸ்மாயில் |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : நடுவனூர் |
| தேதி | : 12.09.2025 | வயது | : 47/2025 |

1969-ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44-ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

2) நானும் இந்த வழக்கின் வாதியும் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். வாதி தான் நடுவனூர் கிராம பள்ளிவாசலில் ஜமாத் தலைவராக உள்ளார் என்றால் சரிதான். பன்னியாமலை கிராமம் சர்வே எண்.236/10 நம்பரில் எனக்கு சொந்தமான இடம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கிராமத்தின் சர்வே எண்.236/11 நம்பரில் எனது தகப்பனார் முகம்மது இஸ்மாயில் அவர்களுக்கு சொந்தமான இடம் உள்ளது என்றால் சரிதான். அந்த இடங்களுக்கு மேல் புறமாக அரசுக்கு சொந்தமான தென் வடல் வண்டி பாதை உள்ளது என்றால் சரிதான்.

3) நானும் எனது சகோதரர் வாதியும் மற்றும் எனது குடும்பத்தினர் மேற்படி வண்டிப் பாதையில் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக பிரதிவாதியின் மருமகன் ஷேக் அப்துல்லா என்பவர் புகார் மனுக்கள் கொடுக்கப்பட்டதன் விளைவாக ஆக்கிரமிப்புகள்

அகற்றப்பட்டது என்றால் சரிதான். இதன் காரணமாக ஏற்கனவே எங்கள் குடும்பத்தாருக்கும், பிரதிவாதியின் குடும்பத்தாருக்கும் இடையே முன்பகை இருந்து வந்தது என்றால் சரியல்ல. என்னுடைய சத்யபிரமாண வாக்குமூலத்தில் வழக்கு விபரங்கள் தெரியும் என்று தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். வாதி சேக் ராவுத்தர் என்பவர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்பது எனக்கு தெரியும். வாதிக்கு பாத்தியமான இடத்தில் பிரதிவாதி வீட்டை காலி செய்ய வேண்டும் என கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். எந்த சர்வே எண்ணிற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 236/1 என்ற சர்வே எண்ணிற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எத்தனை சதுர அடிக்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சதுர அடி கணக்கு தெரியாது 1-3/4 செண்டிற்காக தாக்கல் செய்துள்ளார்.

4) வழக்கு சொத்துக்கான நான்குமால் தெரியுமா என்றால் தெரியும் தெற்கே ரோடு உள்ளது, மேற்கு மற்றும் வடக்கே முன்பு பிச்சையம்மாள் என்பவர் சொத்து இருந்தது தற்போது அந்த சொத்தை விற்று விட்டதால் யார் உள்ளார் என்று தெரியாது. கிழக்கே கனி ராவுத்தர் வீடு உள்ளது. வழக்கு சொத்தை நான் பார்த்துள்ளேன். கொலுசன் பீவி என்பவர் எனது தாயார் ஆவார். மேற்படி கொலுசன் பீவி என்பவர் வாதிக்கு தான செட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணத்தை நான் பார்த்துள்ளேன்.

எந்த சர்வே எண்ணில் எத்தனை சொத்துக்கள், என்ன விஸ்தீரணத்தில் தானமாக எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி சரியாக தெரியவில்லை.

5) பிரதிவாதியானவர் வழக்கு சொத்திற்கு கிழக்கே உள்ள இடத்தில் தான் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல. வாதி இடத்தில் வசித்து வருகிறார். உண்மையில் பிரதிவாதி அவரது சகோதரர் கனி ராவுத்தர் என்பவரது வீட்டில் தான் வசித்து வருகிறார் என்றாலும், வாதி எனது சகோதரர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் சொத்தில் ஒரு வருடம் குடியிருக்க பிரதிவாதி கேட்டதாக பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி, வாதியிடம் குடியிருக்க அனுமதி கேட்ட சமயம் நான் அங்கு இல்லை என்றால் சரிதான்.

6) வாதி, பிரதிவாதியிடம் வீட்டை காலி செய்ய சொல்லி கேட்டதாகவும் அவர் மறுத்து விட்டதால் ஊர் பெரியவர்கள் மூலம் சமரசம் பேசியதாகவும் பிரமாண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். யார், யார் இருந்து சமரசம் பேசினார்கள் என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். வாதி இது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான் நான் கேள்விப்பட்டேன். புகார் கொடுத்த விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். மதுரைக்கு போனவனுக்கு இங்கே எதுக்கு வீடு என பிரதிவாதி வாதியிடம்

சொன்னதாக வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு சொன்னபோது நான் அந்த இடத்தில் இல்லை என்றால் சரிதான்.

7) பிராதில் வழக்கு சொத்து விபரத்தில் வீடு உள்ளது போன்று விபரங்கள் துலங்கப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, ஆனால் வீடு உள்ளது. வழக்கு சொத்து விபரத்தில் வீடு உள்ளது போன்று காட்டப்படாத காரணத்தினாலும், அதில் வாதி ஏற்கனவே குடியிருந்து வந்ததாக கூறப்படாத நிலையிலும், பிரதிவாதி வழக்கு சொத்தில் குடியிருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி தாக்கல் செய்திருக்கும் வழக்கு சொத்து வேறு என்றாலும் பிரதிவாதி குடியிருக்கும் சொத்து வேறு என்றாலும் சரியல்ல. ஏற்கனவே பிரதிவாதியின் மருமகன் எங்கள் மீது புகார் கொடுத்ததில் முன்பகை இருந்த காரணத்தினால் தான் தற்போது வாதியால் இந்த பொய்யான வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், பிரதிவாதி வழக்கு சொத்தில் குடியிருக்க வில்லை என்றாலும் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 12.09.2025 கையெழுத்து செய்துள்ளார்.

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.வ.எண். | : | 56/2024 | வா.சா. | : | 3 |
| பெயர் | : | ராஜேஷ்கண்ணன் | த/பெ. | : | கணேசன் |
| தாலுகா | : | நத்தம் | கிராமம் | : | ஆவிச்சிபட்டி |
| தேதி | : | 10.10.2025 | வயது | : | 40/2025 |

1969-ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44-ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

**வாதி தரப்பில் முதல் விசாரணை**

1. நான் நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையின்பேரில் சாட்சியம் அளிக்கிறேன். நான் திண்டுக்கல் மாவட்டம், நத்தம் தாலுகா, ஆவிச்சிபட்டி கிராம ஊராட்சி செயலராக உள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 முதல் வா.சா.ஆ.8 வரை உள்ள வீட்டுவரி ரசீதுகள் அசல் எங்கள் அலுவலகத்தில் வழங்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.9 ஆவணமான வீட்டுவரி ரசீது கணிணி நகல் எங்கள் அலுவலகத்தில் வழங்கப்பட்டது தான். மேற்படி ஆவணங்களானது நடுவனூரைச் சேர்ந்து முகம்மது இஸ்மாயில் என்பவரது மகனான காஜாமுகைதீன் என்பவர் பெயரிலுள்ளது என்றால் சரிதான்.

2. பட்டா உள்ள நபர்களுக்கு தான் வீட்டுவரி ரசீது வழங்கப்படும் என்றால் சரியல்ல, குடியிருப்பு அடிப்படையிலும் வீட்டுவரி ரசீது வழங்கப்பட்டு வந்தது என்பதால் அதன் தொடர்ச்சியாக நான் பணிக்கு வந்தபிறகு ஏற்கனவே ரசீது தாக்கலாகியிருந்ததால் நானும் ரசீது வழங்கினேன். அதனால் வீட்டுவரி ரசீதானது பட்டாவின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதா அல்லது குடியிருப்பின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதா

என்ற விபரம் எனக்கு தெரியாது. 2024-2025 வருடத்திற்கு வழங்கப்படும் வீட்டுவரி ரசீதுகளானது

முறையாக ஆவணங்களை சரிபார்த்த பிறகு தான் வழங்கப்படவேண்டும் என்றால் சரியல்ல. ஏற்கனவே வழங்கப்பட்ட ரசீதுகளுக்கு தொடர்ச்சியாக அவ்வாறே பணம் செலுத்தும்போது ரசீது கணிணியில் பதிவாகிவிடுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 10.10.2025 கையெழுத்து செய்துள்ளார்.

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.

## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.வ.எண். | : | 56/2024 | வா.சா. | : | 3 |
| பெயர் | : | ராஜேஷ்கண்ணன் | த/பெ. | : | கணேசன் |
| தாலுகா | : | நத்தம் | கிராமம் | : | ஆவிச்சிபட்டி |
| தேதி | : | 10.10.2025 | வயது | : | 40/2025 |

1969-ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44-ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

2) ஆவிச்சிபட்டி ஊராட்சி செயலராக எந்த வருடம் முதல் பணி புரிந்து வருகிறேன் என்றால் 2019 முதல் பணிபுரிந்து வருகிறேன். வா.சா.ஆ.6 2018-2019 ம் வருடத்திற்கான 24.06.2018 ம் தேதியிட்ட வீட்டுவரி ரசீது ஆனது எனக்கு முன்னால் பணிபுரிந்த வீரபாண்டி என்பவர் வழங்கியுள்ளார். 10.07.2021 ம் தேதி விதிக்கப்பட்ட ரசீதானது 2019 முதல் 2021 வரையிலும், பின்னர் 2021 முதல் 2022 வரையிலும் ஒரே தேதியில் இரண்டு வருடங்களுக்கு எனக்கு பிறகு வேலை பார்த்த நாதன்குமார் என்பவரால் வழங்கப்பட்டுள்ளது. பொதுவாக எந்த தேதியில் வரி விதிக்கப்படகிறதோ அதற்கும், அதற்கு பிந்தய வருடத்திற்கும் வழங்கப்படும் என்றால் சரிதான்.

3) வாதியானவர் நடுவனூர் கிராமத்தில் இஸ்லாமிய தலைவராக உள்ளார் என்றால் சரிதான். அவரது குடும்பத்திற்கு எத்தனை சர்வே நம்பரில் வீடு மற்றும் நிலங்கள் உள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ. 6 முதல் 9 வரையிலான ஆவணங்கள் எந்த வீட்டிற்கு விதிக்கப்பட்ட வரி ரசீதுகள் என்று தெரியாது என்றால் சரிதான். எந்த ஆவணங்களின் அடிப்படையில் மேற்படி வீட்டுவரி ரசீதுகள் வழங்கப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியாது என்றால் சரிதான். நீதிமன்றத்திலிருந்து

அழைப்பாணை வந்த பிறகு வரி விதிக்கப்பட்ட வீட்டை நான் பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன், அது எந்த சர்வே எண்ணில் வருகிறது என்றால் தெரியாது.

4) தற்பொழுதும் என்னால் எந்த சர்வே எண்ணில் உள்ள வீட்டிற்கு வரி ரசீதுகள் இந்த வழக்கில் வழங்கப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியாது என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலர் அல்லது சர்வேயரிடம் வழக்கு சொத்து எந்த சர்வே எண்ணில் வருகிறது என்று விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 10.10.2025 கையெழுத்து செய்துள்ளார்.

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.